**செய்தி வெளியீடு எண்:387** **நாள்: 23.06.2017**

## செய்தி வெளியீடு

# அண்ணா நூற்றாண்டு நூலகம்

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வாசகர்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகள் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி முதல் 12:30 மணிவரை நடைபெற்று வருகிறது.

'பொன்மாலைப்பொழுது' என்ற தலைப்பில் பல்வேறு துறைகளில் உள்ள பிரபல ஆளுமைகளுடன் சந்திப்பு வாரந்தோறும் சனிக்கிழமை அன்று மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை நடைபெற்று வருகிறது.

மேலும், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கென இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வருவாய் பணி உள்ளிட்ட அகில இந்தியப் பணிகளில் பணியாற்றும் மூத்த அதிகாரிகள் மற்றும் துறை வல்லுநர்கள் போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கு உரிய ஆலேசனை மற்றும் போட்டித்தேற்விற்கு தயாராகம் வழிமுறைகள் வழங்கி மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணிக்கு நிகழும். இந்நிகழ்ச்சியில் 25.06.2017 (ஞாயிற்றுக் கிழமை) அன்று முனைவர் வெ. இறையன்பு IAS, முதன்மைச்செயலர் / ஆணையர், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, அவர்கள் கலந்து கொண்டு போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவர்களுக்கு உரிய ஆலோசனை மற்றும் வழிமுறைகள் வழங்கி கலந்துரையாட உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ள விரும்புகிறவர்கள் இலவசமாக கலந்து கொள்ளலாம்.

நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் www.annacentenarylibrary.org என்ற இணையதளம் மூலம் காணலாம் என தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**